மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# மரபும் புதுமையும் மிளிரும் கரிச்சான் குஞ்சுவின் படைப்புகள்

முனைவர் இரா. காமராசு,
துறைத்தலைவர், இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழில் நவீன இலக்கியம் கால்கொண்ட வரலாறு சுவாரகசியம் நிறைந்தது. ஆங்கிலக் கல்வி, காலனியக் கலாச்சார உள்வாங்கலை ஏற்றக் குழுக்கள் தங்களின் மரபைக் காக்கவும், விட்டுத்தரவும், புதியதை ஏற்கவுமாக மல்லுக்கட்டியவைதான் தொடக்கக்கால நவீன இலக்கியப் பிரதிகளாக அமைந்தன. இதனை வேறு ஒரு அர்த்தத்தில் கலாநிதி கார்திகேசு சிவத்தம்பி மதிப்பிடுவார்.

"பிரித்தானிய ஆட்சியின் வருகையுடன் தமிழகத்தில் குறுநில ஆட்சியாளர்களின் அதிகார முறைமை சிதைக்கப்பட்டு தாமிரபரணி, காவேரி ஆகிய ஆற்றுப்படுகைகளிலும் கொங்கு நாட்டிலும் ஒரு புதிய சுதேச உயர்குழாத்தினர் (Elite) முக்கியத்துவம் பெறத்தொடங்குகின்றனர். இந்த நன்மையைப் பெற்றோர் பிராமண, வேளாள சாதியினரே. ஆற்றுப்படுகை நகரங்களான திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற கல்வி வசதி காரணமாகக் கீழ்மட்ட அரசு உத்தியோகத்துக்கு இவர்களிலிருந்து உத்தியோகத்தார் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நடைமுறை காரணமாக அரசாங்கத்திற்கும் வெகுமக்களுக்குமிடையே ஊடாடுகின்ற ஒரு சமூகவாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கிறது. மேற்குறித்த இந்தப் புதிய வட்டத்திலிருந்து வந்தவர்களிடையே தம்முடைய தனித்துவம், பாரம்பரியம், பழமை பற்றிய கருத்து, துணிபு நிலைக்குப் படிப்படியாக வளரத் தொடங்குகிறது. இது சமஸ்கிருதம், தமிழ் பற்றிய மொழிகளின் மீள்நோக்குக்கு இட்டுச் செல்லும் அதேவேளையில் குறிப்பாகத் தொண்டை மண்டலப் பகுதியில் இதுகாலம் வரை எத்தகைய கல்வி வசதிக்கும் வாய்ப்பற்றிருந்த அடிநிலை மக்கள் பிரித்தானியத் தொடர்புகளால் சமூக உணர்வு பெறுகிறார்கள்." (இலக்கிய இதழ்கள், உ.த.நி.வெளியீடு, 2004). இதிலிருந்து நோக்க, தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடி இதழ்களெனக் சுட்டப்பெறும் மணிக்கொடி, தேனி, கலாமோகினி, கிராம ஊழியன்

முதலியவையும், இவற்றில் எழுதின எழுத்தாளர்களும் உருவாகி வளர்ந்த வாழ்க்கையை ஒருவாறு யூகிக்கமுடியும்.

**தஞ்சை வட்டாரம்**

இன்று தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் என்று மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது தஞ்சாவூர். இவை மட்டுமல்ல புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் சில பகுதிகளும் சேர்ந்ததுதான் பழைய தஞ்சாவூர் மாவட்டம். காவிரி தீரம், டெல்டா, வண்டல் என்றெல்லாம் இதனை அவரவர் ஆர்வத்திற்கு ஏற்ப அழைப்பர்.

காவிரி ஆற்றுப்பாசனமும், முப்போகம் சாகுபடியும் திருவிழாக்களும், இசை, கூத்து, ஆட்டம்பாட்டங்களும்தான் தஞ்சையின் பொது அடையாளமாகக் சுட்டப்பெறும். சாரட்டு வண்டி, பூரணிமாடு, வெற்றிலைத் தாம்பூலம், பட்டு வேட்டி, சட்டை, மைனர் செயின், மறுவீடு, இராக்கச்சேரி... என்பதான நிலக்கிழமை முறைமையின் எச்சங்களே தஞ்சையின் பெருமிதங்களாகக் கொண்டாடப்பட்டன. பண்ணைகளும், ஜமீன்களும், மடங்களும் ஆளுகை செலுத்தியப் பொழுதுகளில் இவர்களுக்கு கணக்குகளாக, ஏஜென்டாக, ஓடும்பிள்ளையாக இருந்த தரகுத்தனத்தவர்களும் ஆதிக்க நிலை பெற்றனர். காலம் காலமாக சேற்றில் கிடந்து உழைத்து உழன்றவர்கள் உழவுக்கருவிகளொத்த நிலைபேறுபெற்றே இருந்தனர்.

நிலக்கிழமை முறையின் அழிவில் முகிழ்த்த முதலாளியத்தின் முதல் விளைச்சலாக தமிழில் நவீன இலக்கிய வருகை நிகழ்ந்தது. ஆதிக்க அதிகாரச் சுவையை அனுபவித்தறிந்தவர்கள் ஆங்கிலேயக் கல்விக்கு மாறினார்கள். எழுத்தறிவினால் வாசிப்புப் பரவலாக்கம் பெற்றது. வாசிக்க நூல்கள் தேவைப்பட்டன. பத்திரிக்கைத் தொழில் பரவலானது.

முதலில் கல்வியறிவுப் பெற்றவர்கள் தஞ்சைவட்டாரத்தில் பிராமணர்களாக இருந்தார்கள். அந்தப் பிரிவினருக்கு அவர்களில் சிலரே எழுதத் தலைப்பட்டனர். அதில் மண் சார்ந்த வெகுமக்கள் சார்ந்த உணர்வுகளுக்கு எப்படி இடம் இருக்கும்? தனிமனிதச் சிக்கல்களும், பாலியல் உணர்வுகளும், ஆன்மீகத் தேட்டமும் இலக்கியப் படைப்புப் பொருள்களாயின. கூடவே கூட்டுக்குடும்பம் வரதட்சணை, விதவை மணம், பெண்கல்வி முதலியன பெரும் சமூகச் சிக்கல்களாக சித்திரிக்கப்பட்டன. எனவேதான் "மருத நிலத்தையே தங்கள் வாழ்க்கையாகக்கொண்ட வேளாண் மக்கள், முதன்மையானவர்கள். அவர்களின் பண்பாட்டுக் கூறுகளை படைப்பிலக்கியம் உள்வாங்கிக்கொண்டு வெளிப்படுத்தவில்லை. அப்படியே செய்திருந்தாலும் சேற்றில் வாழும் மனிதர்கள் ஒரு ஓரமாகவே நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். நில உடைமையையே மட்டும் உரிமை கொண்ட மேட்டுக்குடி மக்களின் பண்பாட்டுத் தளங்கள் அவர்கள் பேசிய மொழியிலேயே பதிவாகி இருக்கின்றன. கிட்டத்தட்ட இதுதான் தமிழ் என்ற நிலைப்பாடும் நிறுவப்பட்டுவருகிறது" என்ற சோலை.சுந்தரபெருமாளின் கருத்து கவனத்துக்குரியது.

எழுத்தாளர் கரிச்சான் குஞ்சு (1919-1992) வின் இயற்பெயர் நாராயணசாமி. தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம் சேதினீபுரத்தில் பிறந்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் தேர்ச்சி மிக்கவர். மன்னார்குடியில் புகழ்பெற்ற தேசிய மேல்நிலைப்

பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். மணிக்கொடி எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். எழுத்தாளர் கு.ப.ராஜகோபாலன் மீது அளவற்ற நேசம் கொண்டவர். எனவே கு.ப.ரா.வின் புனைபெயரான "கரிச்சான" என்பதையொட்டி "கரிச்சான் குஞ்சு" ஆனவர். கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், நாவல், முதலியன படைத்துள்ளார். மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளர். தேவி பிரசாத் சட்டோபாத்தியாவின் "What is living and what is lead in Indian Philosophy" என்னும் பெருநூலை "இந்தியத் தத்துவத்தில் நிலைத்திருப்பனவும் அழிந்தனவும்" என மொழி பெயர்த்தார். வடமொழியிலிருந்தும் சிலவற்றை மொழிபெயர்த்தார். பல எழுத்தாளர்களின் நேசமிகு நண்பராகவும், இளம் எழுத்தாளர்களின் உந்து சக்தியாகவும் விளங்கினார். தஞ்சை வட்டாரத்தின் நிலக்கிழமைப் பழக்கவழக்கங்களில் ஒரு சிலவற்றில் ஊறித்திளைத்தவர். வழக்கமானத்தமிழ் எழுத்தாளனின் வறுமையோடே வாழ்வைக் கழித்தார். இவர் எழுதிய கதைகளில் மனித பலவீனங்களைப் பற்றிய எள்ளலும் போலித்தனங்களைச் சாடும் சினமும் வெளிபட்டதோடு, கலைஞானம் மிகுந்த மாந்தர்கள் தமது திறமையை முழுமையாகப் பிரதிபலிக்கும் போக்கும் தலைதூக்கி நிற்கக் காணலாம்.

இவர் மனித மன ஓட்டங்களை நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். உளவியல் சார்ந்து இவரது பல பாத்திரங்கள் இயங்குவதைக் காணலாம். தான் பார்த்த, கேட்ட, உணர்ந்தவற்றை மட்டுமே எழுதி உள்ளார். இவரின் படைப்புலகம் மிகச் சிறியது. ஆனால் அழகும் ஆழமும் நிறைந்தது. மணிக்கொடி எழுத்தாளர்கள் கொடி நாட்டியச் சூழலில் சிறுகதைகளை எழுதியவர் கரிச்சான்குஞ்சு. தொடக்கத்தில் அதிகம் வடமொழி கலந்து எழுதினார். புராண, இதிகாச தொன்மங்களிலிருந்து சில சிறுகதைகளைப் படைத்தார். பின்னர் தனது குருவான கு.ப.ராவைப் பின்பற்றி அதே நேரத்தில் தனக்கெனத் தனித்தப் பாணியைப் படைத்துக் கொண்டார். மரபும், புதுமையும் இழையோட இவரின் படைப்புகள் மிளிர்ந்தன. சாத்திர சம்பிரதாயங்களைக் கேள்விக்குட்படுத்தினார். மனித வக்கிரங்களைத் தோலுரித்தார். ஒருவித தத்துவத் தேடலைத் தன் கதைகள் வழி நிகழ்த்தினார்.

**சிறுகதைகள்**

அவரின் சில கதைகள் இன்றைக்கும் தவிர்க்க முடியாதவை. பதினோறு தொகுப்புகள், நூற்று அறுபதுக்கும் மேலான கதைகள். "குசமேட்டுச்சோதி" என்னும் சிறுகதை மிகுந்த எள்ளளுடன் படைக்கப்பட்டுள்ளது. சாப்பிட வழியின்றி பட்டினிகிடந்து பைத்தியமாக நடித்து, மகரிக்ஷியாகி குசமேடாகக் கிடந்த இடத்தை மடமாக்கி குபேரசாமியாக வலம்வருபவனைப் பற்றியக் கதை இது. போலிச்சாமியார்கள், குருட்டுப்பக்தி, மக்களின் மூடத்தனம் ஆகியவற்றை மிக அற்புதமாக இக்கதை இயல்பாகச் சித்திரிக்கிறது. இன்றைய நம் ஆசிரமங்கள், சாமியார்கள், ஆன்மீகம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள இது உதவும்.

"காதல் கல்பம்" சிறுகதை ஒரு வரலாற்று நிகழ்வைச் சுட்டுகிறது. கிழக்கிந்தியக் கம்பெனி, ஆங்கிலக் அரசாக மாறும் தருணத்தில் இலண்டனிலிருந்து பலரும் பல நாட்கள் பயணம் செய்து இந்தியா வருவதைப் பற்றியக் கதை. அற்புதமானப் பயணவிவரிப்பாகக் கதை அமைகிறது. நோயுக்கு ஆளாகி, வெப்பம், குளிர் தாங்காமல் பலர் உயிர்

துறக்கிறார்கள். இந்தியாவின் வளமும், செல்வமும், நிலைத்த வாழ்வும் கனவாகி அவர்களை இந்தக் கொடும் பயணத்துக்குத் துரத்துகிறது. அதில் ஒரு இளைஞன் சூம்பிக் கிடக்கிறான். எல்லோரும் ஆடிப்பாடிக் கும்மாளமிடுகிறார்கள். இவனோ பூஞ்சை உடம்புடன் விசனப்பட்டு நிற்கிறான். கப்பல் மாலுமி இவனைக் கவனித்து ஆறுதல் கூறுகிறான். அவ்விளைஞனுக்கு நிகழ்வாழ்வோ, துணையோ இல்லாததால் தற்கொலைக்கு முறச்சித்து கப்பலின் ஒரு ஓரத்திற்குச் செல்கிறான். அப்பொழுது அவனை எதிர் முனையில் ஒரு பெண் உருவம் பார்க்கிறது. சிரிக்கிறது. இருவரும் சந்திக்கிறார்கள். இணைகிறார்கள். கப்பலின் கேப்டன் அவர்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்கிறான். அவன் கேட்கிறான்.

"என்னய்யா இது காயகல்பமா!

அதைவிடப் பெரிதய்யா! காதல் கல்பம் ! என்றான்

யாரோ ஒரு பிரயாணி"

எனக் கதை முடிகிறது. இதன் கதாநாயகன் இந்தியாவின் கவர்னராக இருந்த வாரன்ஹேஸ்டிங்ஸ் என்பதும் கதாநாயகி ஒரு ஜெர்மனியனின் மனைவி என்பதும் கருதத்தக்கது.

இக்கதையில் வெள்ளைக்காரர்கள் இந்தியா வந்த நோக்கமும் இந்தியா பற்றிய அவர்களின் எண்ணமும் கரிச்சான்குஞ்சுவால் அற்புதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கப்பலில் பயணம் செய்பவர்களை இப்படி வர்ணிக்கிறார். "போய்ப் பார்ப்போம், பணம் கிடைத்தால் திரும்புவோம், இல்லாவிட்டால் இங்கென்ன, அங்கேயே செத்துப் போவோமே, என்ற மனநிலையில் எதற்கும் துணிந்து கப்பலேறியிருக்கும் பிடாரிக்கூட்டம் நடுக்கடல், நாட்களோ தொலையாதவை, வெறிச்சென்று அலுப்பும் சலிப்பும் ஊறி உறைந்து கிடக்கும் அந்தத் தலைசுற்றும் பிரயாணம், சண்டையிலும் வெட்டுக்குத்துகளிலும் கூடக் கிளர்ச்சியைத் தரக்கூடியதாய் விடும். மும்மடங்கு நான்மடங்காய்த் தின்று குடித்துத் திமிரடைந்தால் வேறு என்னதான் செய்வது, பிரயாண நாட்கள் ஏற ஏற அங்கே கண்ணியம் கட்டுப்பாடு என்பதெல்லாம் காணமுடியாதவை ஆகிவிடும்."

அப்போதைய இந்தியாவின் காட்சிச் சித்திரம்: "அப்போதைய இந்தியா இவனைப் போன்ற யாரும் நுழையும்படித் திறந்தேதான் கிடந்தது. நுழைகிறவர்கள் எதையும் கவ்விக்கரவமுடியும். நாடுமுழுவதும் நாலாயிரம் துண்டாய்ச் சிதறியிருந்த காலம். நாய்க்குடைகள் போலக் கிளம்பிய பல தான்தோன்றி அரசுகள். வாரிசுச் சண்டையில் வீட்டுவாசலைக் கூட காக்க முடியாதிருந்த வக்கற்ற வம்பு நவாப்புகள் சிலர். மானத்தை விற்பதுபோலத் தன் பட்டங்களை (பட்டாக்களை) விற்கும் காலம் தள்ளும் கபோதி ஒருவருண்டு. அவர் மாஜிப் பேரரசின் வாரிசு. அந்தப் பட்டங்களுக்கு அங்கீகாரம் தருவதோ மறுப்பதோதான் அந்தக் காலத்தில் ஆங்கிலேயர் விளையாடிய சூதாட்டம். சூதாட்டத்திலும் வரம்புண்டு. முழுச்சூதை மேலும் சூதாக்கும் ஆங்கிலேயரின் அந்த விளையாட்டை நடத்த நவநாகரிகப் பயிற்சி பெற்ற படை வசதி. இப்படிப்பட்ட பொன்னான காலம்." இது வெறும் காட்சிப்படுத்தம் மட்டுமல்ல. இந்தியா பற்றிய விசனமாக, விமரிசனமாக அமைகின்றது.

"குடும்பச் சிதைவு" அற்புதமான குழந்தைகள் கதை. குழந்தைகளின் மன உலகை நுட்பமாகச் சித்திரிக்கும் கதை. சீனு,, மீனு, கிட்டு, சாலி, சம்பு... ஆகிய ஐந்து குழந்தைகள்

குடும்ப விளையாட்டு விளையாடுவதை மிக இயல்பாக கரிச்சான் குஞ்சு பதிவு செய்கிறார். சிறுகதை என்பது கச்சிதமாக அமைகின்றது.

"பெண்சாதி" பெண்சாதியைச் சந்தேகிக்கும் கணவனை நேசிக்கும் பெண்ணின் இயல்பை வெளிப்படுத்தும் கதை. அதே போல "உறவுமுள்" ஆங்கிலேய ஆட்சியில் தன் உடலை ஈந்து சுகபோகத்தை அனுபவிக்கும் பெண்ணின் கதையாக அமைகின்றது.

"மருந்து உண்டா?" நடுத்தரவர்க்கத்தின் வறுமை வாழ்வையும் அதனூடே கொடிய சூதாட்டப் போதையையும் பேசுகின்றது. உடல் நலிவுற்று மருந்துக்காய்க் காத்துக்கிடக்கும் குழந்தைக்கு என வைத்திருந்த ரூபாயையும் சூதாட்டத்தில் இழக்கிறான்.

"உதறிவிட்டு வீட்டுக்கு வந்தேன். திண்ணையில் இருந்தேன். கிழக்கோடு சேர்ந்து வெளுத்துவிட்டிருந்த என் முகத்தைப் பார்த்தாள் சாரதா. ஒன்றுமே பேசவில்லை. விடிந்தது. அன்றும் மருந்தில்லை" எனக் கதையை முடிக்கிறார். ஆனால் வாயில்லாப் பூச்சிபோன்ற மனைவியும், பூஞ்சை உடம்போடு மருந்துக்கு ஏங்கி நிற்கும் பிள்ளையும் சூது போதையில் ஆழந்து முகம் வெளுத்து நிற்கும் ஆணும் மனதில் தொந்திரவு செய்கிறார்கள். சூதை ஒரு கொண்டாட்டமாகவும், அதேவேளையில் அதன் பாதிப்பை மிகக் கோரமாகவும் கரிச்சான் குஞ்சு காட்டிவிடுகிறார்.

பருவப் பெண்ணின் மனநிலையை உணராமல் அவளைப் பைத்தியம் எனக்கருதி மணவிலக்கு அளவுக்கு கொண்டுநிறுத்தும் வேலைப்பார்க்கும் கணவனையும், படித்த அவனது குடும்பத்தையும் எள்ளலோடு சுட்டும் கதையின் தலைப்பான "படித்தவர்கள்" என்பதே குறியீடாக அமைகின்றது.

"இடம்" கரிச்சான் குஞ்சுவிற்கே உரிய கதை. சூழலும் தேவையும் காலமும் பாலியல் மீறல்களை இயல்பாக்கிவிடுவதைச் சுட்டும் கதை.

"சீ... சீ... நாய்க்குட்டி பேசாமல் கிட. ஏது என்னபேசுகிறோம் யாரிடம் பேசுகிறோம் என்ற ஞானம் இருக்கா உனக்கு, ஆயிரம் ரூபா சம்பளம், அத்தனை சொத்துக்காரன் என்றெல்லாம் பீத்திக்கறாயே, இது இந்த இடம் உங்கள் அப்பன் தேடிக்கொடுத்த இடமா? கோமதியைப் பந்தோபஸ்து பண்ணப் போறையோ? இங்கே பட்ட கடன் எப்படித் தீருமடி? யார் தீர்ப்பது? எவனும் பணத்தையும் காசையம் நகையையும் நட்டையும் சும்மா கொட்டமாட்டான். எதை எப்போ எப்படி பந்தோபஸ்து பண்ணனும்னு இந்த ராஜத்துக்குத் தெரியும். உன்னைவிடப் பெரிய இடமாகத் தேடுவேன் அவளுக்கு பெரிய சுத்தக்காரி.. நீ பேசறையோ..." என்றாள் ராஜம்.

தானும் தன் அம்மாவும் இழந்ததை, பெற்றதை தன் மகளும் நோக்கி நகர்வதை தாங்கமுடியாமல் ரோசப்படும் லில்லியும், அதை நியாயப்படுத்தும் ராஜமும் சிக்கிநிற்கும் கோமதியும் எல்லாவற்றுக்கும் காரணமாகி நிற்கும் சிதம்பரமும்... என மனிதர்களின் மனப்புழுக்கத்தை உடலியல் நியாய அநியாயங்களை, பொருளியல் தேவைகளை என ஒவ்வொரு திசையில் விவாதிக்கும் கதையாக இதனைப் படைத்துள்ளார்.

"ரத்தச் சுவை" கரிச்சான் குஞ்சுவின் இலக்கியப் பார்வையை விரித்துரைக்கும் நல்லதொரு சிறுகதை. கோபாலய்யர் என்பவரிடம் வட்டிக்குப் பணம் வாங்கி தன் வீடு உள்ளிட்டச் சொத்துக்களை இழக்கிறான் ராமு. அவன் பைத்தியம் போலத் திரிகிறான்.

ஊரில் உள்ள ஒரு குரங்கு இரத்தவெறி பிடித்து அலைகிறது. இதனை ஊரில் உள்ள ஏமாற்றுப் பேர்வழிகளுடன் ஒப்பிட்டுப் பேசுகிறான் ராமு. குரங்குப்பற்றியே அவன் சிந்தனை முழுக்க ஓடுகிறது. ராமு மூலமாக கரிச்சான் குஞ்சு, குரங்கை இப்படிக் காட்சிப்படுத்துகிறார்.

"இந்தக் குரங்கு எத்தனை நாய்க்குட்டிகளைத் தூக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தெரியுமா? ஆரம்பத்திலே தாய் நாய்கள் குரைத்துத் துரத்தியதால் இதற்கு ஏற்பட்ட கோப வெறியில் குட்டிகளைத் தூக்கிச் சென்றது. கொன்றது இவ்வளவுதான் ஊராருக்குத் தெரியும். எனக்கு அதுக்குமேலே தெரியும். குட்டிகளின் கழுத்தை நெரித்துக் கிழித்துக் கையால் குதறி எறியும். கையெல்லாம் ரத்தமாய் விடும். துடைக்கத் தெரியாமல் நக்கும். ரத்தம் நாக்கில் படும். தணிந்த வெறிக்கும் இந்தச் சுவைக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டு இது அடிக்கடி ஏற்படுவதால் நினைவில் அழுந்தும். பிறகு அதே செய்கைக்குத் தூண்டும். வெறி வந்தவுடன் நாக்குச்சுவையும் நினைவுக்கு வரும். வெறியும் தணியும். சுவையும் கிடைக்கும். இப்படியே வழக்கமாகி இன்று இந்தக் குரங்கு ரத்த வெறி மிகுந்து கிடக்கிறது. நேற்று ஒரு ஆட்டைக் கிழித்துக் காயப்படுத்திவிட்டது. கதையெல்லாம் எதற்கு? இன்று இந்தக்குரங்கு பரிபூர்ண ரத்தவெறி பிடித்துப் பக்கா மாம்ஸபக்ஷியாய் மாறிவிட்டிருக்கிறது. அந்தக் குரங்கை அப்படியே செய்ய அனுமதிப்பதைத்தான் தர்மமென்று கூறுகிறது. ஸமூஹம். இதோன் கோபாலய்யர் கதையும்.

ஒரு கவிதைபோல கதையை அமைத்து விடுகிறார் கரிச்சான் குஞ்சு. பெரும்பாலும் பொதுமொழி விவரணைகள் நிரம்பியவை இவரது கதைகள். கு.ப.ரா போலவே இவரின் கதைகளிலும் பெண்கள் அதிகம். உளவியல் நுட்பம் இவரிடம் தூக்கல். மார்க்சியப் பரிச்சய மிக்கவராதலால் வர்க்கச்சார்பு, வறுமை, ஏழ்மை, ஆதிக்க எதிர்ப்பு இவர் கதைகளில் காணப்படுகின்றது. மரபைப் போற்றலும் மீறலும் ஆங்காங்கே தென்படுகின்றன.

சிறுகதைகள் வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் அதன் வரையறைகளோடு அமைகின்றன. கச்சிதமான பாத்திரங்கள், உரையாடல், விவரிப்பு, முடிவு.... என ஒருவித தாள, லயத்திற்குள் கதைகளை அமைத்து விடுகிறார். எதையும் வலிந்து திணிக்காமல் கதைப் போக்கில் தான் சொல்லவேண்டியதை வைத்து ஒதுங்கிக் கொள்கிறார். ஆசிரியர்தான் கதை சொல்வார். ஆனால் அவரைத் தேடித்தான் காணவேண்டும். இதுதான் கரிச்சான் குஞ்சுவின் கலைச்சாதனை எனலாம்.

**பசித்த மானிடம்**

கரிச்சான் குஞ்சுவின் ஆகச்சிறந்தப் படைப்பாக "பசித்த மானிடம்" நாவல் அமைகின்றது. கும்பகோணம், தஞ்சாவூர், மன்னார்குடி, திருச்சி ஆகிய ஊர்களில் விடுதலைக்கு முன்னும் பின்னுமான ஐம்பது ஆண்டுகளில் கதை நடைபெறுகின்றது. இது தனிமனிதர்களின் மனப்போக்குகளை மையமிட்டு நிகழ்த்தப்படுகின்றது.

கணேசன், கிட்டா ஆகிய இரண்டு சமகாலச் சிறுவர்களில் கணேசனை ஊர் கொண்டாடுகின்றது. கிட்டா புறக்கணிப்புக்குள்ளாகிறான். காலப் போக்கில் படிக்கப்போன கணேசன் ஒரு ராவுத்தரோடு அறிமுகமாகி ஏறக்குறைய ஒருபால் சிக்கலில் தன்னை இழந்து அவர் காலமானதும் மீள்கிறான். பிறகு ஒரு ஆசிரியையை மணக்கிறான். நோயாளி

ஆகி பெண் மருத்துவரோடு காலம் தள்ளுகிறான். நோய்க்கு (குஷ்டம்) ஆளானதை அவள் உணர்ந்து கன்னியாஸ்திரிகள் உள்ள மருத்துவமனைக்கு அனுப்புகிறாள். கன்னியாஸ்திரிகளைக் கணேசனின் காமக்கண் விரட்ட அங்கிருந்து விலகி, திருச்சி அம்மா மண்டபத்தில் பிச்சைக் காரனாகிறான். அங்கு ஒரு குருட்டுப் பெண், குழந்தையோடு ஐக்கியமாகிறான். பசுபதி என்கிற போலீஸ்காரன் அவனை "குருவாக்கி" விடுகிறார். இந்நிலையில் தான் செல்வச் செழிப்புமிக்க நிலையில் உள்ள கிட்டா மற்றும் அவனின் மனைவி, கொழுந்தி ஏற்கனவே கணேசனுக்கு அறிமுகமானவர்கள், சந்திப்பும் சர்ச்சையும் உண்மை அறிதலும் நிகழ்கிறது. இதுதான் நாவலின் சாரம்.

"உணர்வு கடந்த சிந்தனைகள் ஊழ்வினையைப் போல் மனித மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டு இன்பத்திற்காக அதிலும் சிறப்பாக, பாலுறவு இன்பத்திற்காக மேற்கொள்ளப்படும் உணர்வு கடந்த முயற்சிகளுக்கும் மனம்தானே மாற்றியமைத்துக் கொள்ளும் எதார்த்த விதிமுறைகளுக்கும் இடையில் நடைபெறும் மாற்றமுடியாத மனப் போராட்டங்களாக இருக்கின்றன" என்றக்கூற்றின் அடியாக இந்நாவல் இயங்குகின்றது.

ஆண்களின் தேடுதல் வேட்டை ஒருபுறம் பெண்களின் தேட்டம் மறுபுறம், ஆணும் பெண்ணும் உடலை மோகித்து, மூழ்கி, கரைந்து, கரையேறும் நிகழ்வுகள் பல நாவலில் இடம் பெறுகின்றன. "தனிநபரின் அனுபவங்கள் சமூகப் பண்பாட்டுக் கூறுகளுக்குத் தொடர்பில்லாதவை அல்ல, ஆனால் இக்கூறுகள் ஒரு தனி நபரின் அனுபவங்களின் வழியாக ஒரு தனித்துவமான நவிற்சி பெற வேண்டும். இந்தத் தனித்துவமான வெளிபாட்டு உரிமைமீதே தனி மனிதத்துவம் எழுந்து நிற்கிறது எனலாம். கூட்டுப் பொதுவுள் அடையாளம் அற்றுப்போகாத இத்தகைய தனித்துவ நவிற்சிகளையே தனிமனிதத்துவ நவிற்சி எனலாம்" என்ற துரை சீனிச்சாமியின் கருத்துப்படி இந்நாவல் அமையவில்லை எனினும் இதில் உளச்சித்தரிப்பு அதிகமாக உள்ளது.

அக்காலச்சூழல் சமூகச்சூழல், பண்பாட்டுக்கூறுகள் பல இடம்பெறுகின்றன. சமூகத்தை ஒரு கேமரா மாதிரி பார்க்கும் நுட்பம் கரிச்சான்குஞ்சுவின் படைப்பாக்கத் திறனாக அமைகின்றது. கணேசன் தன் இளமைக்கால நினைவுகளை அசை போடுகின்றான். அதில், "மாட்டுக்குப் பருத்திக் கொட்டை அரைக்கவேண்டும். தவிடு சலிக்க வேண்டும், பால் பாத்திரம், வேறுபாத்திரங்கள் இருந்தால் தேய்க்க வேண்டும். சாயந்திரமாய் ஜகந்நாத பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கும் காபி கிளப்பில் மசால்வடை வாங்கித் தின்னவேண்டும். ராயர் கொடுத்த அரையணாவுக்கு இரண்டு வடை கிடைக்கும். சுடச்சுட வெங்காயம் மணக்க மணக்க அரையும் குறையுமாய் அரைக்கப்பட்டுப் பொரிந்து கடிபடும் கரகரவென்ற கடலைப்பருப்பு இனிக்க இனிக்க அந்த மசால் வடை தின்னும் அனுபவம் மிகவும் ஆனந்தமாயிருக்குமே"

"மத்தியானம் நல்ல ருசியான சாப்பாடு சத்திரத்து மாமி கறியோ, கூட்டோ, குழம்போ, ரஸமோ, நெய்யோ, பருப்போ ஒன்னுமே குறைக்கமாட்டாள். வீட்டில் உள்ளவர்களுக்கும் சரி சாப்பிட வருகின்ற ஏழைகளுக்கும் சரி ஒரே சாப்பாடுதான். அடேயப்பா என்ன சாப்பாடு போடுவாள்" என்று உணவுப் பழக்கம் நாவலில் பதிவாகின்றது. கணேசனின் மன்னார்குடி வாழ்க்கை இப்படிச்சித்திரமாகின்றது. ஷஷமாளிகை, மெத்தை, பஞ்சணை, ஸோபா, பங்களா, மின்விசிறி, கார் பிரயாணம், புசஷ்டியான ஆகாரங்கள்,

கழுத்தில் மைனர் சங்கிலி, கையில் தங்கச் சங்கிலியில் கோர்த்த உயர்ந்த கடியாரம், தங்க மோதிரங்கள். வைர மோதிரம், விலை அதிகமுள்ள சட்டை. வேஷ்டி, பட்டு, பவுடர், சோப்பு, செண்டுகள் இவற்றுடனேயே வாழ்ந்து வளர்ந்து...”

இது கணேசனுக்கு மட்டுமல்ல. தஞ்சை நிலவுடைமையாளர் பலரின் பொது அடையாளம் இவைதாம். தஞ்சை வட்டாரப் பதிவுகள் ஆங்காங்கே நாவலில் இடம்பெறுகின்றன. தோப்பூர் கிராமத்தில் கணக்குப்பிள்ளை சீனி அய்யங்கார் பற்றி கரிச்சான் குஞ்சு எழுதுகிறார். ஊரில் அவரிடம்தான் எல்லோரும் கடன் வாங்குவார்கள். ஏற்கனவே இந்நிலையை ரத்தச்சுவை சிறுகதையிலும் எழுதியவர், நாவலில் போகிறப் போக்கில் இப்படி எழுதுகிறார்:

“கணக்குப்பிள்ளை சீனி அய்யங்கார் தர்பார் எல்லோரும் அறிந்த ஒன்று. எல்லோருக்கும் சிண்டு இருக்கோ என்னவோ, அத்தனை பேர் சிண்டும் சீனி அய்யங்கார் கையில் இருக்கிறது” என்பார்.

“இரண்டே ரண்டு ஆப்பை, இரண்டும் கழண்ட ஆப்பை”

“கேக்காம கடன் கெட்டது, ஆடாம உறவு கெட்டது”

“ஆகாத காலத்துக்கு அன்னத்துவேசம் போறாத
காலத்துக்குப் பிராமணத்துவேசம்”

போன்ற வட்டார வழக்குகள் நாவலில் இடம் பெறுகின்றன. மனிதர்களின் உடற்பசியை மட்டுமல்ல, வயிற்றுப்பசியை, அறிவுப் பசியை, புகழ்ப்பசியை, ஞானப்பசியை... பசித்த மானிடமாகக் கரிச்சான்குஞ்சு படம் பிடித்துக் காட்டுகின்றார்.

காலம் முழுவதும் உடல் துரத்த ஓடிய கணேசன், கடைசியில் நாற்றப் பிண்டமாகி இப்படி கூறுகிறான்:

“கனவுன்னா இடம், பொருள் மனுசஷாள்ளாம் உண்டே, இங்கே இதெல்லாம் ஒண்ணுமில்லை. தூங்காம கனவு எப்படி வரும்? குடி தின்னுன்னு சொல்றபோது ஞாபகமும் வந்துடறது. இந்த உடம்பைச் சுமந்துகொண்டு அலையறமோன்னா இழவு உசிருன்னும் ஒண்ணு இருந்து தொலைக்கிறதே... இதுகளுக்கு வழி...? எனக்கு அதைப்பத்தியெல்லாம் பன்னிப் பன்னிச் சொல்லத் தெரியலே. ஆனா எனக்கு வரவர தூக்கம் முழிச்சிண்டிருக்கிற தூங்கிற சங்கதியெல்லாம் மறந்துண்டும் மறைஞ்சிண்டும் வரது. யாராவது என்னைத் தொடறபோது பசி தாகமெல்லாம் உண்டுன்னு ஞாபகப்படுத்தறாப்பலே எனக்கு எதையாவது குடுக்கிற போதுதான் உங்களைத் தெரியறது.”

இந்த ஞானம் அவன் பட்ட பட்டறிவால் வந்தது என்பதை நாவல் சுட்டி நிற்கிறது.

கடைசி கடைசியாக கணேசன்...

“நாம் எதையெதையோ சாப்பிடுகிறோம். நம்மையும் எது எதெல்லாமோ முழுங்கி ஏப்பம் விடுகிறதுகள். தானும் எதையும் சாப்பிடாமை, தன்னை எதுவுமே சாப்பிடவிடாமை... இந்த உலகம் அத்தனையிலும் பரவி ஊடுருவி இருக்கிறதுதான் நாம்” என்கிறான். இந்த ஞானம், தேடல், முடிவு இந்திய மரபிலிருந்து கரிச்சான் குஞ்சு கண்டடைந்ததாக இருக்கலாம்.

கரிச்சான் குஞ்சுவின் படைப்புகள் மனித மன உணர்வுகளை மையப்படுத்தி அமைந்தன. சிறுகதைகளில் மரபை பல இடங்களில் கேள்விக்குள்ளாக்குகிறார். வறுமையும், ஏழ்மையும் மட்டுமல்ல இவற்றுக்குக் காரணமான சூழ்ச்சியையும் கதைகளில் சுட்டுகின்றார். அவரின் அனுபவ உலகு சிறியது. அதற்குள் நின்று அவரின் கலைத்தேடலை நிகழ்த்தியுள்ளார். அவரின் மெய்யியல், ஆன்மீகப் பின்புலம் அவரின் கதை இலக்கியங்களில் தெளிவாகப் பதிவாகின்றது.

அடித்தள மக்கள், வேளாண் மக்கள், விடுதலைப் போர் சார்ந்த அவர்காலத்துத் தடயங்கள், படைப்புகளில் இல்லை. நிலவுடைமை உறவுகள், பண்பாடு பதிவாகின்றது. யதார்த்த எழுத்து முறை அவரிடம் இருந்தாலும் அவர் காலூன்றியது தமிழ் நவீனத்துவத்தில் என்றால் அது மிகையல்ல.